# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 51/மா/2025
நாள் 27.03.2026

C. வேங்கையன்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி.

(2) வீட்டு உரிமையாளர்,
கதவு எண் 7, சுந்தரம் பிள்ளை மெயின் ரோடு
சென்னை–600 081.

(3) வீட்டு உரிமையாளர்,
கதவுஎண் 103/20 D,
எண்ணூர் நெடுஞ்சாலை,
சென்னை–600 081.

(4) வீட்டு உரிமையாளர்,
கதவு எண் 11/62,
நேதாஜி நகர்,
சென்னை–600 081. --- எதிர்மனுதாரர்கள்

(5) வீட்டு உரிமையாளர்,
கதவு எண் 77, அழகிரி தெரு,
சென்னை–600 081

சென்னை–600 104, சென்னை, உயர்நீதிமன்றம், சிட்டி நீதிமன்ற வளாகம், லா அசோசியேசன் என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் வழக்கறிஞர் திரு. C.வேங்கையன் என்பவரின் 07.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.12.2024 அன்று பெறப்பட்டு 51/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 104, சென்னை உயர்நீதிமன்றம், சிட்டி நீதிமன்ற வளாகம், லா அசோசியேசன் என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் வழக்கறிஞர் திரு. C.வேங்கையன் என்பவர் 07.12.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"1. நான் சென்னை மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் வழக்கறிஞராகவும் மற்றும் சமுதாயத்தில் சமூக சேவகராகவும் பணியாற்றி வருகிறேன். சென்னை பெருநகர மாநகராட்சியின்

நிர்வாகத்தின் கீழ் வரும் பகுதிகளில் குடியிருப்பு/வணிக வளாக கட்டிடம் கட்டுவதற்கு மாநகராட்சி அல்லது CMDA விடம் உரிய அனுமதி பெற்று தொகை செலுத்தி கட்டுமானம் நடைபெறுவதே சட்டப்படி சரியானதாகும். இதன்படி கிடைக்கும் தொகையின் வழியாக அரசின் மூலம் மக்கள் நலப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் சில நபர்கள் உரிய அனுமதி பெறாமலும் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாமலும் கட்டிடங்கள் கட்டி சென்னை மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தி வருகின்றனர். இதை சரிகட்ட சென்னை பெருநகர மாநகராட்சி அடிக்கடி சொத்து வரி, தொழில் வரி போன்றவற்றை உயர்த்தி வருகின்றன. இதனால் நான் உட்பட அனைத்து தரப்பு மக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றன.

2. இந்நிலையில் சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் வரும் மண்டலம்–4, வார்டு 38–க்கு உட்பட்ட பகுதிகளில் சில மாதங்களுக்கு முன்பு நான்கு குடியிருப்பு/வணிக கட்டிடங்கள் உரிய அனுமதியற்று மற்றும் விதிகளை மீறியும் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன, அதன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(A) கதவு எண் 07 சுந்தரம் பிள்ளை மெயின் ரோடு, எண்ணூர் நெடுஞ்சாலை ((E.C.I பள்ளி எதிரில்), தண்டையார்பேட்டை, சென்னை – 600 081, மண்டலம்–04 வார்டு–38, இந்த மூன்று மாடி கட்டிடம் வாகன நிறுத்தம் இல்லாமல் அருகில் இடம் விடாமல் விதிமீறல் வணிக கட்டிடம் தொடர்பாக சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்ட இணையதள புகார் எண் 2024-382ILC நாள் 29.06.2024.

(B) கதவு எண் 103/20D எண்ணூர் நெடுஞ்சாலை, சுந்தரம் பிள்ளை நகர், தண்டையார்பேட்டை, சென்னை–600081, மண்டலம்–04, வார்டு–38, இந்த இரண்டு மாடி அனுமதியற்ற/விதிமீறல் வணிக கட்டிடம் தொடர்பாக சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்ட இணையதள புகார் எண் 2024-947DTQ நாள் 21.06.2024.

(C) கதவு எண் 11/62, நேதாஜி நகர், A தெரு, தண்டையார் பேட்டை, சென்னை–600081, மண்டலம்–04, வார்டு–38, இந்த மூன்று மாடி அனுமதியற்ற/விதிமீறல் குடியிருப்பு கட்டிடம் அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டது தொடர்பாக சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்ட இணையதள புகார் எண் 2024-586NIJ நாள் 11.07.2024.

(D) கதவு எண் 77, அழகிரி தெரு நெடுஞ்செழியன் நகர், I.O.C. தண்டையார் பேட்டை, சென்னை – 600 081, மண்டலம்–04, வார்டு–38, இந்த நான்கு மாடி அனுமதியற்ற/விதிமீறல் கட்டிடம் தொடர்பாக சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்ட இணையதள புகார் எண் 2024-538JHO,நாள் 25.07.2024

3. மேற்கண்ட நான்கு அனுமதியற்ற/விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பான புகார்களை நேரிலும், இணைய வழியாகவும், வாய் மொழியாகவும் பலமுறை அளித்தும் தற்போதுவரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கொடுக்கப்பட்ட புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது, நடவடிக்கை எடுக்கப்படும், என பதில் மட்டும் அளிக்கப்பட்டது. எனினும் சட்டப் படியான நடவடிக்கைகள் தற்போதுவரை எடுக்கவில்லை, மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடங்களின் உரிமையாளர்கள் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர்கள் என்பதால் சென்னை மாநகராட்சி மண்டலம்–04ன் அலுவலர்கள் அனுமதியற்ற/விதிமீறல் கட்டங்களின் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரிய வருகிறது.

4. மேற்கண்ட அனுமதியற்ற/விதிமீறல் கட்டிடங்களால் சென்னை பெருநகர மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவது ஒருபுறமென்றாலும் கட்டடத்தின் தரம் குறைவு, அதை பயன்படுத்தும் பொதுமக்களின் பாதுகாப்பு, நகர்புற வளர்ச்சிக்காக சாலை விரிவாக்கம், நகர்புற மேம்பாட்டு கட்டணம் வசூலித்தல் போன்ற விசயங்களை செயல்படுத்த முடியாமல் போகிறது. விதியை மீறி கட்டும் கட்டடங்களால் நகர்புற வளர்ச்சி என்பது பகல் கனவாகிறது. மேலும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் W.PNo.16555/2014 உத்தரவின்படி அனுமதியற்ற / விதிமீறல் கட்டிடங்கள் மீது சென்னை பெருநகர மாநகராட்சி (GCC) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்துடன்(CMDA) இணைந்து சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற நீதிமன்ற உத்திரவும் மேற்கண்ட மண்டலம்–04ன் அலுவலர்கள் செயல்படுத்தவில்லை.

5. எனவே, மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் பொது நலனுடன் தாக்கல் செய்யப்பட்ட இந்த புகாரினை விசாரணை செய்து மேற்கண்ட நான்கு அனுமதியற்ற/விதிமீறல் கட்டிடங்கள் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று இம்முறைமன்றத்தை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 24.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால், அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 13.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் சார்பாக வழக்கறிஞர் பா. யுவராஜ் என்பவர் 13.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"(1) சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் வரும் மண்டலம்–4, வார்டு 38–க்கு உட்பட்ட பகுதிகளில் முன்பு நான்கு குடியிருப்பு/வணிக கட்டிடங்கள் உரிய அனுமதியற்ற மற்றும் விதிகளை மீறியும் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன. அதன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(A) சென்னை–81, வார்டு 38 தண்டையார்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலை, சுந்தரம் பிள்ளை தெரு, கதவு எண்.7ல் கட்டப்பட்டுள்ள இந்த மூன்று மாடி கட்டிடம் வாகன நிறுத்தம் இல்லாமலும், இடவெளி விடாமல் விதிமீறி வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இணையதள புகார் எண் 2024-382ILC நாள் 29.06.2024.

(B) சென்னை – 81, மண்டலம்–04, வார்டு–38, தண்டையார்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலை, சுந்தரம் பிள்ளை தெரு, கதவு எண்.103/20D கட்டப்பட்டுள்ள இரண்டு மாடி அனுமதியற்ற / விதிமீறல் வணிக கட்டிடம் தொடர்பாக சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்ட இணையதள புகார் எண் 2024-947DTQ நாள் 21.06.2024.

(C) சென்னை–81 தண்டையார்பேட்டை, நேதாஜி நகர் A தெரு, கதவு எண்.11/62,கட்டப்பட்டுள்ள மூன்று மாடி அனுமதியற்ற/விதிமீறல் குடியிருப்பு கட்டிடம் அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டது. தொடர்பாக சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்ட இணையதள புகார் எண் 2024-586NIJ நாள் 11.7.2024.

D) சென்னை–81, தண்டையார்பேட்டை, நெடுஞ்செழியன் நகர், அழகிரி

தெரு, கதவு எண் 77ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம் நான்கு மாடி அனுமதியற்ற / விதிமீறி கட்டப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்ட இணையதள புகார் எண் 2024-538JHO, நாள் 25.07.2024.

(2) மேற்கண்ட நான்கு அனுமதியற்ற / விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பான புகார்களை நேரிலும், இணைய வழியாகவும், வாய் மொழியாகவும் பலமுறை அளித்தும் தற்போதுவரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கொடுக்கப்பட்ட புகாருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது, நடவடிக்கை எடுக்கப்படும், என பதில் மட்டும் அளிக்கப்பட்டது. எனினும் சட்டப் படியான நடவடிக்கைகள் தற்போதுவரை எடுக்கவில்லை.

(3) மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் W.PNo.16555/2014 உத்தரவின்படி அனுமதியற்ற / விதிமீறல் கட்டிடங்கள் மீது சென்னை பெருநகர மாநகராட்சி (GCC) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்துடன்(CMDA) இணைந்து சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற நீதிமன்ற உத்திரவும் மேற்கண்ட மண்டலம்–04ன் அலுவலர்கள் செயல்படுத்தவில்லை.

(4) எனவே, மேற்கண்ட நான்கு அனுமதியற்ற / விதிமீறல் கட்டிடங்கள் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

5. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலைப் பொறியாளர் 13.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் புகாரில் தெரிவித்த சென்னை, தண்டையார்பேட்டை, சுந்தரம்பிள்ளை மெயின் ரோடு கதவு எண் 7, 103/20D, நேதாஜி நகர் A தெரு கதவு எண் 11/62 ஆகிய கட்டிடங்கள் விதி மீறி கட்டப்பட்டதற்கு 04.07.2025 அன்று Notice for production of documents வழங்கப்பட்டும், தண்டையார்பேட்டை, நெடுஞ்செழியன் நகர், அழகிரி தெரு, கதவு எண் 77 அமைந்துள்ள கட்டிடத்திற்கு தரைத் தளம் மட்டும் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மூலம் உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தாக்கீதுகள் நகல் மற்றும் புகைப்பட நகல்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன்.''

6. மூன்றாம் எதிர்மனுதாரரான சென்னை–600 081, தண்டையார்பேட்டை, சுந்தரம் பிள்ளை நகர், 103/20D என்ற முகவரியில் உள்ள வீட்டு உரிமையாளர் Dr.N. கருணாகரன் என்பவரின் சார்பாக வழக்கறிஞர் திரு. மோ. மனோஜ்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 13.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''எனது மனுதாரரின் மேற்கண்ட வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி கோரி 10 வருடங்களுக்கு முன்பு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ல் அலுவலகத்தில் அளிக்கப்பட்டு இதுரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இது குறித்து மண்டலம் 4ல் கேட்ட போது எங்கள் பகுதி விரிவாக்கம் செய்யப்படவுள்ளதால், எனது மனுதாரர் மனு மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்தனர். மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ல் அலுவலகத்தால் வழங்கப்பட்டதாக கூறப்படும் தாக்கீது எதுவும் எனது மனுதாரருக்கு

வழங்கப்படவில்லை என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் எதிர்மனுதாரர்களான சென்னை–600 081, சுந்தரம்பிள்ளை நகர், கதவு எண் 7, நேதாஜி நகர், கதவு எண் 11/62 மற்றும் அழகிரி தெரு, கதவு எண் 77 ஆகிய முகவரியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் அல்லது அவர்கள் சார்பாக யாரும் ஆஜராக வில்லை.

8. மனுதாரரின் மனு, மனுதாரர்களின் சார்பாக ஆஜராகிய வழக்கறிஞரின் வாக்குமூலம், எதிர்மனுதாரர்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மூன்றாம் எதிர்மனுதாரரான Dr.N. கருணாகரன் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு. மோ. மனோஜ்குமார் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் வரும் மண்டலம்–4, வார்டு 38–க்கு உட்பட்ட பகுதிகளில் சென்னை–81, தண்டையார்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலை, சுந்தரம் பிள்ளை தெரு, கதவு எண்.7ல் கட்டப்பட்டுள்ள மூன்று மாடி கட்டிடம் வாகன நிறுத்தம் இல்லாமலும், இடவெளி விடாமல் விதிமீறி வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், தண்டையார்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலை, சுந்தரம் பிள்ளை தெரு, கதவு எண்.103/20D-ல் இரண்டு மாடி அனுமதியற்ற / விதிமீறல் வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், தண்டையார்பேட்டை, நேதாஜி நகர் A தெரு, கதவு எண் 11/62–ல் மூன்று மாடி அனுமதியற்ற/விதிமீறல் குடியிருப்பு கட்டிடம் அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளது என்பதும், சென்னை 81, தண்டையார்பேட்டை, நெடுஞ்செழியன் நகர், அழகிரி தெரு கதவு எண் 77ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம் நான்கு மாடி அனுமதியற்ற / விதிமீறி கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட நான்கு அனுமதியற்ற / விதிமீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இணையதளம் மூலம் புகார்கள் அளிக்கப்பட்டது என்பதும், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் W.PNo.16555/2014 உத்தரவின்படி அனுமதியற்ற / விதிமீறல் கட்டிடங்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்துடன்(CMDA) இணைந்து சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற நீதிமன்ற உத்திரவினை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–4–ல் செயல்படுத்தப்படவில்லை என்பதும், எனவே, மேற்கண்ட நான்கு அனுமதியற்ற / விதிமீறல் கட்டிடங்கள் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் சார்பாக ஆஜராகிய வழக்கறிஞரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகாரில் தெரிவித்த சென்னை, தண்டையார்பேட்டை, சுந்தரம்பிள்ளை மெயின் ரோடு கதவு எண் 7, 103/20D, நேதாஜி நகர் A தெரு கதவு எண் 11/62 ஆகிய கட்டிடங்கள் விதி மீறி கட்டப்பட்டதற்கு, Notice for production of documents வழங்கப்பட்டுள்ளது என்பதும், தண்டையார்பேட்டை, நெடுஞ்செழியன் நகர், அழகிரி தெரு, கதவு எண் 77 அமைந்துள்ள கட்டிடத்திற்கு தரைத் தளம் மட்டும் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மூலம் உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

தனது மனுதாரரான Dr.N. கருணாகரன் என்பவரின் சென்னை–600081, தண்டையார்பேட்டை, சுந்தரம் பிள்ளை நகர், 103/20D என்ற முகவரியில் உள்ள வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி கோரி 10 வருடங்களுக்கு முன்பு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ல் அலுவலகத்தில் அளிக்கப்பட்டு இதுரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதும், தங்கள் பகுதி விரிவாக்கம் செய்யப்படவுள்ளதால், தனது மனுதாரர் மனு மீது நடவடிக்கை

எடுக்கவில்லை என மண்டலம் 4-ல் தெரிவிக்கப்பட்டிருப்பது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ல் அலுவலகத்தால் வழங்கப்பட்டதாக கூறப்படும் தாக்கீது எதுவும் தனது மனுதாரருக்கு வழங்கப்படவில்லை என்பதும் எதிர்மனுதாரர் சென்னை–600081, தண்டையார்பேட்டை, சுந்தரம் பிள்ளை நகர், 103/20D-ன் வீட்டு உரிமையாளர் Dr.N. கருணாகரன் என்பவரின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு. மோ. மனோஜ்குமார் என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை, தண்டையார்பேட்டை, சுந்தரம்பிள்ளை மெயின் ரோடு கதவு எண் 7, 103/20D, நேதாஜி நகர் A தெரு, கதவு எண் 11/62 ஆகிய மூன்று கட்டிடங்கள் விதி மீறி கட்டப்பட்டதற்கு, Notice for production of documents வழங்கப்பட்டது என்றும், தண்டையார்பேட்டை, நெடுஞ்செழியன் நகர், அழகிரி தெரு, கதவு எண் 77 அமைந்துள்ள கட்டிடத்திற்கு தரைத் தளம் மட்டும் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மூலம் உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன்படியும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (2023 திருத்தப்பட்டது)–ன்படியும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் தொடர்பான மாண்பமை உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதி மன்ற வழிகாட்டுதல்களின்படி உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலரை அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும் மனுதாரரின் மனுவின் நகல் இம்முறைமன்ற நடுவ 24.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ற்கு அனுப்பப்பட்டு 15 நாட்களுக்குள் அறிக்கை அளிக்குமாறு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (முறையீடு, தாக்கல், விசாரணை மற்றும் தீர்ப்பு செய்யப்படுதல்) விதிகள், 2015, விதி 9–ன்படி கோரியும், மேலும் இம்முறைமன்ற நடுவ 08.10.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதத்தில் 15 தினங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், தவறும்பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு, துறைரீதியான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படும் என்று தெரிவித்து இருந்த போதிலும், இறுதி வரை அறிக்கை அனுப்பாமல், மெத்தனமாக செயல்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. சி. வேங்கையன்,
வழக்கறிஞர், லா அசோசியேசன்,
சிட்டி சிவில் நீதிமன்ற வளாகம்,சென்னை உயர்நீதி மன்றம்,
சென்னை–600 104.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003,

(3) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600 021.

(4) வீட்டு உரிமையாளர்,
கதவு எண் 7, சுந்தரம் பிள்ளை மெயின் ரோடு,
எண்ணூர் நெடுஞ்சாலை (இசிஐ பள்ளி எதிரில்)
தண்டையார்பேட்டை, சென்னை–600 081.

(5) வீட்டு உரிமையாளர்,
கதவு எண் 103/20D, எண்ணூர் நெடுஞ்சாலை,
சுந்தரம் பிள்ளை நகர், தண்டையார்பேட்டை,
சென்னை–600 081.

(6) திரு..N. கருணாகரன், வீட்டு உரிமையாளர்,
கதவு எண் 11/62, நேதாஜி நகர், A தெரு,
தண்டையார்பேட்டை., சென்னை–600 081.

(7) வீட்டு உரிமையாளர்,
கதவு எண் 77, அழகிரி தெரு, நெடுஞ்செழியன் நகர்,
I.O.C. இசிஐ பள்ளி எதிரில், தண்டையார்பேட்டை,
சென்னை–600 081.

(8) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

செயலாளர்.